கட்டைச் சுற்றிலும் இருக்கிற வரப்பு, வாய்க்கால்கள் மிகவும் பழுதடைந்து இருக்கிற காரணத்தாலும்—பல ஆண்டுகளுக்கு முன்பு பழுது பார்த்த காரணத்தாலே—சீரழிந்து இருக்கிற அந்த வரப்பு வாய்க்கால்களை செம்மை செய்வதற்கு தற்போது நிதி ஒதுக்கித் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீர் நிலை ஆய்வு செய்ய வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. அந்த முடிவுகளை மிக விரைவாக வாங்கி தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். வரத்துக் கால்வாய்கள் தூர்ந்துபோய் இருப்பதை என்னுடைய கவனத்திற்கு தற்போது கொண்டு வந்து இருக்கிறார்கள். அதற்கு வேண்டிய தகுந்த நடவடிக்கை எடுக்க அதிகாரிகளுக்கு உத்திரவிடப்படும்.

திரு. க. சோலைராசு: துணைத் தலைவர் அவர்களே, மணப்பாறை வட்டத்திலே மக்களுடைய பொழுதுபோக்காக அங்கே இருக்கக்கூடியது இந்த அணை. இந்த அணையிலே இருக்கின்ற, கண்கவரும் வகையில் இருக்கின்ற அந்தப் பூங்கா தற்போது சிறிதுகாலமாக சீரழிந்து இருக்கிறது. எனவே பூங்காவைச் செம்மைப்படுத்துவதற்கு அதிக நிதியினை ஒதுக்க வேண்டும். மேலும் இந்த அணைக்கட்டிற்குச் செல்வதற்குத் தேவையான சாலை மிகவும் பழுதடைந்திருக்கிறது. சாலையைச் சரி செய்வதற்காக, பொதுப்பணித்துறையினரைக் கேட்டால், அணைக்கட்டை மேம்படுத்துவதற்கு மட்டுமே நிதியிருக்கிறது என்று சொல்கிறார்கள். சாலைக்குத் தனியாக நிதி இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இந்த அணைக்கட்டுக்குச் செல்லக்கூடிய அந்த சாலையை மேம்படுத்துவதற்கு விரைவிலே நிதி ஒதுக்கித்தர அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: துணைத் தலைவர் அவர்களே, இது சம்பந்தமாக அதிகாரிகளோடு பேசி, நிதிநிலைமைக்கேற்ப தகுந்த முடிவு எடுக்கப்படும்.

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு, 1987 (ஆ. இ.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1987ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும், ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.